விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 சித்திரை 11 ஐ. ஆகி 29 இதழ் 70

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 24—4—82

தொல்புரம் பாணுவெட்டிச் சம்பவம்:

## கடற்படை, இராணுவப்படைத் தளபதிகளுக்கு யாழ். அரச அதிபர் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

''யாழ். மாவட்டத்தில், கடற்படையினருக்கும் பொது மக்களுக்குமிடையே நீண்ட காலமாக நல்ல உறவு இருந்து வருகிறது. இதனைச் சீர்குலைக்க சிலசக்திகள் முயற்சித்திருப்பதாகவே கருதுகின்றோம். தொல்புரத்தில் கடந்த புதன் கிழமை இரவு நிகழ்ந்த சம்பவம் கண்டிக்கத்தக்கது'' என்று யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு.தேவநேசன் நேசையா தெரிவித்துள்ளார்.

தொல்புரம் பாணுவெட்டியில் நிகழ்ந்த சம்பவம்குறித்து 'ஈழநாடு' பத்திரிகைக்குயாழ். அரச அதிபர் விடுத்த செய்தியில்; கடற்படையினரை பற்றி யாழ். மாவட்டத்தில் நல்ல அபிப்பிராயம் உண்டு. பொது மக்களுக்கும் கடற்படையினருக்குமிடையே சௌஜன்ய உறவு நிலவுகிறது. இதனைச் சீர்குலைக்க சில சக்திகள் முயற்சித்திருப்பதாகவே பாணுவெட்டிச் சம்பவம் காட்டுகிறது. கடற்படையினருக்கும் யாழ். மாவட்ட மக்களுக்குமிடையே தொடர்ந்து நல்லுறவு நிலவ வேண்டும்'' என்று தெரிவித்துள்ளார்.

### தாக்குதல் சம்பவம்

தொல்புரம் பாணுவெட்டியில் நிகழ்ந்த சம்பவத்தைத் தொடர்ந்து பொதுமக்கள் தாக்கப்படுவதாகவும் இது சம்

(8ம் பக்கம் பார்க்க)

# யாழ். நூலகத்தைப்புனரமைக்க

# ஜனதிபதி நிதிப்பிரிவு நியமனம்

## பொதுமக்களிடம் நிதிஉதவி கோரப்படும்

(கொழும்பு)

**யாழ். பொதுசன நூலகத்தை புனரமைக்க ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் ஆலோசனையின் பேரில், நிதிப்பிரிவொன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கென மத்திய வங்கியில் புறம்பானதொரு வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிக்கும் ஜனதிபதி நிதிப் பிரிவு; இதற்கான நிதியை, தொழிலதிபர்கள், கொடைவள்ளல்கள் ஆகியோரிடமிருந்து திரட்டும்!**

ஜனதிபதி நிதியிலிருந்து 10 லட்சம் ரூபாவை யாழ். பொதுசன நூலகத்திற்குவழங்கவும் இச்சபை தீர்மானித்துள்ளது.

இந்நிதி நூலகத்திற்கு தேவையான நூல்கள், தளபாடங்கள், மற்றும் பொருட்களை வாங்க இப்பணம் பயன்படுத்தப்படுமெனவும்தெரிவிக்கப்பட்டது.

யாழ்.பொதுசனநூலகத்தை புனரமைக்க 1கோடி 10லட்சம் ரூபா தேவைப்படுகிறது.

யாழ். பொதுசனநூலக புனரமைப்புக்கு நன்கொடையாக நிதியை வழங்க விரும்புவோர் அதனை காசோலையாகவும் ஜனதிபதியின் செயலாளருக்கு அனுப்பலாமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

கடந்தவருடம் ஜூன்மாதம் முதலாம் திகதி இடம்பெற்ற வன்செயல்களின்போது யாழ். பொதுசன நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது தெரிந்ததே.

(வெ)

## ''பொதுமக்கள் தாக்கப்படுகின்றனர்''!

### ஜனதிபதி, ஐ. ஜி. பிக்கு அமிர்தலிங்கம் தந்தி

(யாழ்ப்பாணம்)

''தொல்புரம் பாணுவெட்டியில்கடந்தபுதன்கிழமைநிகழ்ந்த சம்பவத்தைத்தொடர்ந்து அப்பாவி மக்கள் தாக்கப்படுகின்றனர். இளைஞர்கள் துன்புறுத்தப்படுகின்றனர். இது சம்பந்தமாக உடனடியாகநடவடிக்கை மேற்கொள்ளவும்'' என்று ஜனதிபதியையும், பொலிஸ்மா அதிபரையும் எதிர்க்கட்சித்தலைவர் திரு.அ. அமிர்தலிங்கம் தந்தி மூலம் கோரியுள்ளார்.

''பொதுமக்களைச் சேர்ந்த இரண்டு கோஷ்டியினர், மது போதைக்குப்பின்னர் தங்களுக்குள் வாக்குவாதப்பட்டு, தாக்கப்பட்டு, ஒரு கோஷ்டியை மற்றைய கோஷ்டி கற்களால் தாக்கிக்கொண்டிருந்த போது, தற்செயலாக அப் பகுதி வழியாக கடற்படையினரின் ஜீப் சென்றது. எதிர்பாராத விதமாக கடற்படையினர்மீதும் கற்கள்விழுந்தன. இதனைத் தொடர்ந்து கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இச்சம்பவத்தைத்தொடர்ந்து பொது மக்களும், இளைஞர்களும் இம்சிக்கப்படுகின்றனர். சுழிபுரம் விக்டோரியா கல்லூரியைச்

(8ம் பக்கம் பார்க்க)

## சிவகுமார் சந்தேகநபர்: பிணைமனு நிராகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

மாலினி மரண விசாரணை தொடர்பாக றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சிவகுமாரை பிணையில் விடுமாறு தாக்கல் செய்யப்பட்ட மனுவை யாழ். நீதவான் நிராகரித்து அவரைதொடர்ந்து றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

5வது தினமாக யாழ் நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் மாலினி மரண விசாரணை நடைபெற்றது. சிவகுமார் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். தவராசா கூறியதாவது:

''இங்கு சாட்சியமளிக்க அழைக்கப்பட்ட சிவகுமார் ஒரு சாட்சியாகவே அழைக்கப்பட்டாரேயன்றி சந்தேக நபராக அழைக்கப்படவில்லை. பொலிஸாரால் அவர் சந்தேக நபராக ஆஜர் செய்யப்படவில்லை. அவர் சாட்சியமளிக்கும் போது இடையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்

(8ம் பக்கம் பார்க்க)

மாலினி மரணவிசாரணை!

## ''பலவிடயங்களில் சிவகுமார் பொய் சொல்கிறர்''

### தொடர்ந்து றிமாண்டில் வைக்க நீதவான் கட்டளை

(யாழ்ப்பாணம்)

''சிவகுமார் பல விடயங்களில் பொய் சொல்லுகிறர் என்று மன்றுக்குத் தோன்றுகிறது. ஆகவே இந்த வழக்கில் சிவகுமார் என்பவர் ஒரு சந்தேக நபராக இருப்பார் என்றும் மன்றுக்குத் தோன்றுகிறது. கிளிநொச்சிபொலிசாரை இவருக்கெதிராக விசாரணை செய்யும்படி உத்தரவிடுகிறேன்''.

மாலினி மரணவிசாரணையில் 5ம் நாள் விசாரணைஇறுதியில், யாழ், நீதவான் திரு. ரி. ஜோகநாதன் விடுத்த கட்டளையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கட்டளையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: ''இந்த வழக்கு சம்பந்தமாக இதுவரை பதிவுசெய்யப்பட்ட சாட்சியங்களையும் சம்பவம் நடந்த இடங்களைப் பார்வையிட்டு அவதானித்த விடயங்களையும் கொண்டு, இந்த வழக்கில் இதுவரை சாட்சியமளித்த சாட்சியங்களை ஒப்பிட்டுப் பார்த்தபோது சிவகுமார் பல

(8ம் பக்கம் பார்க்க)

இன்றைய முக்கிய நிகழ்ச்சி

வணக்கம்! வருக!

யாழ்நகர முதல்வர் உயர்திரு இராசா விசுவநாதன் அவர்கள்

இன்று காலை 10 மணிக்கு | எமது

பிரவுண்சன் ரேட் சென்ரர்

(டெலிவிஷன், வானெலிப்பெட்டி, எவர்சில்வர் பொருட்கள், மின் இயக்கப் பொருட்கள்)

விற்பனைக் களஞ்சியத்தை நல்வாழ்த்துக்களுடன் திறந்துவைக்கும் இனிய நிகழ்ச்சியில் கலந்திட வருக! வணக்கம்!

2918

### மணிவாக்கு

காக்கைக் குருவி எங்கள் குலம் என்றும் பாரதிபாடிய இந்த நாட்டிலே, சூத்திரர்கள் 'மனிதர்கள்' எங்கள் குலம் என்று சொல்வதற்கு இன்றும் அஞ்சலாமா?

— அறிஞர் அண்ணா,

# நமது நோக்கு

## திறமைக்கேற்ற தொழில்

'அரசாங்க வேலையை மாத்திரம் எதிர்பார்க்காமல் திறமைக்கேற்ற ஒரு தொழிலைத் தெரிவுசெய்து முறைப்படி பயின்று தொழில்புரிந்தால் நல்ல வருவாயை எமது இளைஞர்கள் ஈட்டமுடியும்.'

இவ்வாறு கூறியவர் வடமாகாண அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா அவர்கள்.

கோண்டாவில் கிழக்குக் கிராம அபிவிருத்திச்சங்கம், சனசமூக நிலையம், மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் 30-வது ஆண்டு நிறைவு விழாவில் ஆற்றிய அறிவுரை இது.

தகுந்த இடத்தில் தகுந்த மனிதன் வழங்கிய தகுந்த கருத்து என்பதனால் இதனை நாம் விமர்சிக்க முற்பட்டோம்.

பேசுவதென்னதென்றே தெரியாத அரசியல்வாதியோ, வாசாலமாகப் பேசிப்பழகிய சமூகத் தொண்டர்குழாமின் 'கோயில் மேளமாக' இவ்வாறு பேசியிருந்தால் அதற்கு அர்த்தம் காணும் முயற்சியில் நாம் இப்பத்தியை விரயஞ்செய்யத் துணியோம்.

அரசாங்க சேவையிலும் சமுதாய முன்னேற்றத்துக்கு அரும்பணிபுரியலாமென்ற நம்பிக்கையை வளர்த்துவரும் அரசாங்க அதிபர் தேவநேசன் தம்முடைய விவேகத்திலும் அனுபவத்திலும் கண்டதையே கருத்தாகக்கொண்டிருப்பது கண்கூடு.

அரசாங்கத்தின் அடிப்படைக்கொள்கையிலுள்ள குறைகள் அநீதிகள் யாவற்றையும் கருத்தில்கொண்டால் அரசாங்க அதிபரின் இக்கருத்து இன்னும்கூடிய முக்கியத்துவம் பெறுகின்றது.

திறமை அடிப்படையை அரசாங்கம் கடைப்பிடிக்கத்தவறினால் மக்கள் அதனைக் கண்டிப்பதோடு நின்றுவிடலாமா? தாங்கள் அதற்கு முன்மாதிரியாக அமையலாம் அல்லவா? திறமைக்குத் தாமே முன்னிடம் அளிக்கமுன்வர வேண்டாமா?

அரசாங்கம் மக்களுக்குத் தொழில் வழங்கும் கடமையில் பின்னின்றால் மக்கள் தம் சுய உதவி ஆற்றலைப் பயன்படுத்தி முன்னேறத் துணியவேண்டும். குற்றங்காண்பதை அரசியல்வாதிகளிடம் விட்டுவிடுவது விவேகம்.

கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூகநிலையங்கள் இன்றைய நெருக்கடியில் பொழுதுபோக்கும் நிலையங்களாக மட்டும் நின்றுவிடலாகா. அவை இளைஞர்களுக்குத் தொழிற்பயிற்சி அளிக்கும் நிலையங்களாகத் துரிதப்படவேண்டும்; தொழில்களில் வேறுபாடு காண்பது இன்றைய சமுதாய பொருளாதார வளர்ச்சிக்கு முரண்பட்ட நிலை; உழுத்துப்போன சமுதாய வழக்கு.

இன்று இந்நாட்டிலிருந்து தொழில் தேடிப்போகும் லட்சக் கணக்கான இளைஞர்கள் யுவதிகள் தொழில் திறமையுடையவர்களாயில் உலகில் பல பாகங்களிலும் உழைக்கும் வாய்ப்புப்பெறுகின்றனர் என்பது கண்கூடு.

ஆனால் நாமிங்கு வற்புறுத்த விரும்புவது திறமைக்கேற்ற தொழில் பயிற்சியையே! வெளிநாடு செல்லும் வேகத்தையல்ல; உள்நாட்டில் உழுவதிலையே எமது பூரண நம்பிக்கை.

தொழில் நுட்ப உலகில் காலத்துக்கேற்ற நல்லை தொழில்நுட்ப பயிற்சிபெறாதவர் செல்லாக்காசாகப் போய் விடுகிறார்; புல்லு வெட்ட, பழம் பறிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திலும் இயந்திரபயிற்சிதேவையென்றால் அதனைப் பழகவேண்டிய நிலை இன்றைய நிலை.

தச்சுவேலை, மேசன்வேலை கராச் வேலை, வெல்டிங் முதலிய தொழில்கள் ஆயிரம், இவற்றால் கிடைக்கும் ஊதியம் அதிகம் உழைப்பவன் புருஷலட்சணமுடையவன்! தேவையற்ற சாதித் பிரச்னைப் பல்லவியை பாடவேண்டியதேன்?

## பிரிட்டனின் விசித்திர நிலை

போக்லந்து நெருக்கடியில் போர்க்கோலம்கொண்டிருக்கிறது பிரிட்டன்; பிரிட்டிஷ் ராணியின் இரண்டாவது மகன் அன்ட்ரு ஹெலிகொப்டர் விமான ஓட்டியாக பிரிட்டிஷ் கடற்படையுடன் போக்லந்துக்கு விரைந்தது பண்டைக்கால அரசர்கள் – அவரின் முன்னோர்கள் படைத் தலைவர்களாக போருக்குப் புறப்பட்டதை ஞாபகப்படுத்துகிறது.

இதற்கு நேர்மாறாக சென்றவாரம் அவரின் தாயார் பிரிட்டிஷ் ராணி எலிசபெத் கனடாவிற்கு விஜயஞ்செய்தது அந்நாட்டின் சுதந்திர சாசனத்தை வழங்குவதற்கு!

உலகில் இரண்டாவது பெரும் நாடாகிய கனடா இதுவரைக்கும் டொமினியன் அந்தஸ்தையே பெற்றிருந்தது; உண்மையில் சுதந்திரநாடாக விருந்தாலும் இப்போதுதான் உத்தியோகபூர்வமான பூரண சுதந்திரம்பெற்ற நாடாக பிரிட்டன் பிரகடனப்படுத்தியுள்ளது.

தாய் ஆண்ட நாட்டின் சுதந்திரவைபவத்தில் ஈடுபட, மகன் குடியேற்ற நாட்டை மீண்டெடுப்பதில் பங்குபற்றும் சம்பவம் உண்மையில் விசித்திரமானது; மண் ஆசையா, ஆட்சியின் கௌரவமா? காலம் காட்டும்.

கனடிய மக்கள் இன்று அடைந்திருக்கும் புதிய நிலையில் எள்ளளவும் மகிழ்ச்சியடையவில்லை. கனேடிய பிரதமருக்கே இப்புதிய சாசனம் ஒரு வெற்றியாகும்; அவருக்கு உவப்பான மத்திய ஆட்சி அதிகாரம் அதிகரிப்பதற்கு இது உதவிபுரிகிறது மக்களுக்கு வெறுப்பான நிலை இது.

கனடிய மக்கள் சமஷ்டி ஆட்சியில் விடிவுகாணவில்லை. பிரெஞ்சு பேசும் கனடிய மக்கள் பிரிந்து போவதற்கு கிளர்ச்சிசெய்கின்றனர். மொழி உணர்வு சாதாரணமானதா?

போக்லந்தில் குடிவாழும் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பிரிட்டிஷ் ஆட்சியையே விரும்புகின்றனர். சுதந்திர வாழ்வு இன்னதென்று தெரியாதவருக்கு அடிமைத்தனம் இனிப்பதும் ஒரு விசித்திரம்.

# பல்கலைக்கழகங்களில் நிலவும் நெருக்கடி

பேராசிரியர் ௭ திரிவீரசரத்சந்திர

நாங்கள் எந்தவொரு குறிப்பிட்ட அரசாங்கத்தினதும் நிலைப்பாட்டில் அன்றித் தேசிய நலனைக் கருத்திற்கொண்டு பல்கலைக் கழகங்களில் ஒரு நெருக்கடி உண்டு என்பதனை முதலில் அங்கீகரிக்க வேண்டும்' பல்கலைக்கழகங்கள் கல்வியின் கேந்திரதானங்களாகவும், அறிவைத் தேடுவதிலும் ஆய்வு முயற்சிகளிலும் ஈடுபட்ட ஆண்களையும் பெண்களையும் கொண்ட சமூகங்களாகவும் விளங்கிய தன்மையைப் பெரிதும்இழந்துவிட்டன. அவை இன்று பெற்றோரால் கைவிடப்பட்ட பிள்ளைகளைப் போல எவ்வித நோக்கமுமின்றி இளையோர் திரிகின்ற, தனிமைப் படுத்தப்பட்டு விரக்திக்குள்ளான குடியமைவுகளைப் போலாகி விட்டன. ஆசிரியர்களைக் காண்டல் அரிது, அவர்கள் சிறிது நேரம் வந்துவிட்டுத் தமது பிரதான கருமம் வேறெங்கோ இருப்பதுபோல விரைவில் அகன்று விடுவர்.

### தொடர்பு விரிசல்

நான் குறிப்பிட்ட நெருக்கடி மேல்வருமாறு விளக்கப்படலாம்: அது போதிப்பவருக்கும் போதிக்கப்படுபவருக்கும் இடையிலே காணப்படுவதும் வளர்ந்துகொண்டிருப்பதுமான தொடர்பு விரிசலிற் புலப்படுகின்றது. அது மூத்த பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையில் வயதிலும் நோக்கத்திலும் உள்ளவேறுபாடுகளால் உருவாக்கப்பட்ட தலைமுறை இடைவெளி அன்று. அது இளம் ஆசிரியர்களாலும், அதாவது கல்வித்தகைமைகளும் ஆராய்ச்சி அனுபவமும் பெற்றுப் பூரண ஆசிரியர்களாக வந்துவிட்டவர்களாலும் உணரப்படுகின்றது.

இடநெருக்கடி வேறோர் உருவத்தில், பொதுமக்கள் கொண்டதோர் உணர்வாக, அநேகமாக நிர்வாகத்தினரால் எடுத்துரைக்கப்படுவதாய் வெளிப்படுகின்றது. அது யாதெனில், பதினைந்து அல்லது இருபது ஆண்டுகளுக்கு முற்பட்ட பட்டதாரியிலும் பார்க்கதரம்குறைந்தவாக இன்றைய சராசரிப் பட்டதாரி அமைகிறார் என்பதாகும். இன்றைய பல்கலைக்கழகப் பட்டதாரியின் பொது அறிவு மிகவும் குறுகியது என்றும். தன்னைச் சூழவுள்ள விடயங்களில் சிறப்பாக உலகவிவகாரங்களில் அவருக்கு மிகக் குறைந்த ஆர்வமே உண்டென்றும், அவருடைய உணர்வாற்றலும் பகுத்தறிவாற்றலும் தாழ்ந்தவை என்றும் அவர்கள் கூறுவர்.

இவ்விரு கருத்துக்களையும் ஒவ்வொன்றாக நோக்குவோம்; இன்றைய மாணவர் தமது பாடங்களிலோ அல்லது அவற்றுக்கு அப்பாலோ மிகவும் குறைந்த அளவில் வாசிப்பதே தொடர்பு இடைவெளிக்கான காரணமென்று கூறப்படுகின்றது சிங்களமொழியில் உள்ள நூல்கள்மிகவும்குறைவாகவும் தொடக்கநிலையினவாகவும் காணப்படுகின்றன. ஆங்கிலத்திலுள்ள நூல்களை வாசித்தறியவல்ல மொழியாற்றல் இல்லாமையால் அந்நூல்கள் அவர்களுக்கு எட்டாதவையாயுள்ளன. எனவே விரிவுரைகளிற் கொடுக்கப்படும் குறிப்புகளிலேயே மாணவர் தங்கியிருக்கின்றனர் என்று ஆசிரியர் கூறுவர். பரீட்சைக் காலத்திலே நூல்நிலையம் மாணவர்களால் நிறைந்து காணப்படினும். விரிவுரைக் குறிப்புகளை வாசிக்க அவர்கள் அங்கு வருவதாய்தெரிகிறது.

ஆசிரியர் அனுபவிக்கும் விரக்தி பெரும்பாலும் போதிய அறிவுசார்ந்த மட்டத்தில் அவர்களால் மாணவர்களுடன் பொதுவிடயங்களிலோ அல்லது சிறப்பறிவுத் துறைகளிலோ கலந்துரையாட முடியாததனால் ஏற்படுகின்றது. எனவே, முன்னைய காலம் போல அறிவூக்கமோ அல்லது மாணவருடனான அறிவுப்பரிமாற்றமோ கிடையாமையே முறைப்பாடாகும். ஆதலால் அவர்கள் தாம் ஆர்வங்கொண்டுள்ளவற்றை ஏனையோரோடு பகிர்ந்து கொள்ள முடியாமல் வெறும் வெளியிற் செயற்படுவதாக உணர்கிறார்கள். எனவே அவர்கள் மாணவர்களைத் தனியே விட்டுவிட்டுத் தாம் தனிப்பட்ட முறையிற் கற்பதிலோ ஆய்வு செய்வதிலோ அல்லது பெரும்பாலும் பல்கலைக்கழக வாழ்க்கைக்கு அப்பால் அறிவுத்துணை பெறக்கூடிய துறைகளிலோ ஈடுபடுவர்,

(தொடரும்)

# குறைந்த கட்டணத்தில் பெரும் மருத்துவக் கல்வி

யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற்றுவருகின்ற மருத்துவக் கண்காட்சி யாழ். குடாநாட்டில் வாழும் மக்களுக்கு வைத்தியத்துறைபற்றியும், உடலியல்பற்றியும், சுகாதாரசேவை பற்றியும் அறிந்துகொள்ள அதிக சந்தர்ப்பங்களை வழங்கியுள்ளதென்றே கூறவேண்டும்.

கண்காட்சியில், காட்சிப் பொருட்களை மட்டும் அழகாக ஒழுங்குபடுத்தி வைத்திருப்பதோடு நின்றுவிடாது அவற்றிற்கான விளக்கங்களையும், அருகே நின்று மருத்துவர்களும், மருத்துவ மாணவர்களும் பார்வையாளர்களது சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் விதத்தில் வழங்குகின்றனர்.

முதலாவது காட்சியறையிலிருந்து, இறுதியான காட்சி அறை வரை மருத்துவத்தின் வளர்ச்சியினை படிப்படியாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

பழங்கால வைத்திய முறைகள், அப்போது பாவிப்பிலிருந்த சத்திரசிகிச்சைக் கருவிகள் என்பனவும், தற்போது வளர்ச்சியடைந்திருக்கும் சத்திரசிகிச்சை, பாவிப்பிலுள்ள நவீன கருவிகள் என்பனவும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

மனிதருக்கு ஏற்படும் சரும வியாதியின் பல்வேறு தன்மைகள்பற்றிமாதிரிகளிலேயே எளிதாக விளங்கக்கூடிய விதத்தில் காண்பிக்கப்படுகின்றது. இதைவிட 'சிலைட் படக்கருவி' மூலமாகவும் இவ்வியாதியின் தன்மைகள்பற்றியும், தவிர்க்கும் முறைகள் பற்றியும் விளக்கப்படுகின்றன.

அனந்த்

சிறுநீரக நோய்க்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகளில் பிரதானமானது டயலிஸிஸ் என்னும் வைத்திய முறை (Dialysis). இச் சிகிச்சைமுறை நமது நாட்டிலே அதிகளவில் பிரபல்யமடையாததொன்று. ஏனெனில் இதற்குச் செலவாகும் தொகையோ கணிசமானது.

பாரதப் பிரமுகர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியின் பாரியாரான ஜாக்குலினை தம்வசப்படுத்திய தனவந்தர் அரிஸ்டோர்டில் ஒனசிஸ் போன்றவர்களே இத்தகைய டயலிஸீஸ் சிகிச்சையை நீண்டநாட்களுக்கு சிறுநீரக வியாதிக்காகப் பயன்படுத்தி அதன் பயனை அனுபவித்தவர்கள்.

இச்சிகிச்சைமுறைஇன்று ஒரு பிரபல்யமடைந்ததும் அநேகமானவர்கள் மேற்கொள்வதொன்றாகவும் இருக்கின்றபோதிலும் இதனைமேற்கொள்வதற்கு ஏற்படும் செலவு மிகவும் அதிகமானது.

இத்தகைய டயலிஸிஸ் சிகிச்சை எவ்வாறு, சிறுநீரக வியாதியால் பீடிக்கப்பட்ட ஒருவருக்கு வழங்கப்படுகின்றதென்பனையும் மாதிரிகள் மூலமாக இக்கண்காட்சியில் நன்கு விளக்கப்படுகின்றது.

இவற்றைவிட மூளை நரம்புகளில் ஏற்படும் வியாதிகள், கட்டிகள் போன்றன பற்றிய விளக்கங்களும் இம்மருத்துவக் கண்காட்சியில் வழங்கப்படுவதுடன், கனம் மிக்க, கூரிய ஆயுதங்களாலும், துப்பாக்கி ரவைகளாலும் தாக்கப்பட்டதனால் சிதைவுண்ட நிஜமான மண்டை ஓடுகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் ரைபிள், சுழல் துப்பாக்கி, கைத்துப்பாக்கி போன்றவற்றால் சுடப்பட்டு இறந்தவர்களின் உடலுறுப்பின் சூடுபட்ட பகுதிகளும் அப்புறப்படுத்தப்பட்டு பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின்கீழே, எவ்வளவு தூரத்திலிருந்து துப்பாக்கியால் சுடப்பட்டிருக்கின்றதென்ற தகவல்களும் தரப்பட்டுள்ளன.

மருத்துவபீடத்துக்குத் தெரிவானோர் தமக்கு வழங்கப்படும் பிரேத பரிசோதனைகள் (Anatomy) பயிற்சிகள் பற்றிச் சொல்லக்கேட்டிருக்கின்றோம். பிரேத பரிசோதனை பற்றிய பயிற்சிகளே மருத்துவ மாணவன் ஒருவனை உடலுறுப்புக்களின் தன்மைபற்றி அறிந்த ஒரு முழுமையான வைத்தியனாக்குகின்றது.

எனவே இத்தகைய சிகிச்சைப்பயிற்சிகள் எவ்வாறு

(7-ம் பக்கம் பார்க்க)

# "டாக்டரிடம் நடந்ததை கூறச் சொன்னேன் ஆனால் மாலினியால் பேசமுடியவில்லை"

## மாலினி மரண விசாரணையில் முகாமையாளர் சிவகுமார் சாட்சியம்

- கே. யோகநாதன் -

(யாழ்ப்பாணம்)

'மாலினி தள்ளாடிக்கொண்டிருந்தார். நடக்கமுடியாமலிருந்தார். என்னநடந்தது என்றேன். ஒன்றுமில்லைப்பயப்படாதீர்கள்' என்று மாலினி கூறினார். உதவிக்கு யாரையும் கூப்பிடட்டுமா என்றேன். ஆட்களைக் கூப்பிட்டுத் தன்மரியாதையைக் கெடுக்கவேண்டாம் என்றார்.

என்ன குடித்தீர்? என உரத்த குரலில் கேட்டேன். ஹோல் யன்னலில் உள்ள போத்தலைப்பார்க்கும்படி கூறினார்.'

மாலினி மரணவிசாரணையில் சாட்சியமளித்த பிராந்திய முகாமையாளர் செல்லத்துரை சிவகுமார் (வயது 31) மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. யோகநாதன் முன்னிலையில் மரணவிசாரணை நடைபெற்றது.

ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபன விடுதியில், 15-ம் திகதி மர்மமானமுறையில் மரணமான கூட்டுத்தாபனக் கணக்காளர் கே. மகேந்திரனின் மனைவியான மாலினியின் (22 வயது) மரணவிசாரணை யாழ். நீதிமன்றத்தில் நடைபெற்றுவருகிறது.

இறந்த மாலினியின் நலனைக் கவனிக்கச் சட்டத்தரணி ஜிம்மி ராசரத்தினம் ஆஜரானார். சிவகுமார் சார்பில் சட்டத்தரணிகளான ஆர். தவராசா, எஸ். சிவபாதசுந்தரம், எஸ். கனகசபாபதி ஆகியோர் ஆஜரானார்கள்.

விசாரணையைப் பார்ப்பதற்கு நீதிமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் ஏராளமானோர் கூடியிருந்தனர்.

பிராந்திய முகாமையாளர் செ. சிவகுமார் கூறியதாவது;

'14-ம் திகதி இரவு 12 30 மணிக்கு மாலினியும் நானும் சாப்பிட்டோம். இரவு 12-15 மணிக்கு வீட்டுக்குப் போனேன். அதன் பின்னர் காரியாலயக் கணக்கு வேலையைக் கவனித்தேன்.

நீதிவான்: 10-30 மணி முதல் 12-30 மணிவரை காரியாலய வேலைகளைப் பார்த்தீரா?—ஆம். 11-45 மணி வரை காரியாலய வேலைகளைச் செய்துகொண்டிருந்தேன். கணக்குப்பட்டியலைத் தயாரித்தேன்.

நீதி: மாலினி உம்முடன் அவ்வளவு நேரமும் இருந்தாரா?— இருந்து கதைக்கவில்லை. அங்குமிங்குமாக நின்றார்.

நீதி: என்ன கதைத்தார்?— தனக்கும் தன் கணவனுக்கும் ஏற்பட்ட சச்சரவு பற்றிக் கூறினார். முன்னர் வைபவங்களில் கணவன் சென்று வேறு பெண்களுடன் ஆங்கில நடனமாடியதாக மாலினி கூறினார்.

நீதி: கணவனுடன் ஏதாவது சண்டை நடந்ததாகக் கூறினாரா?—சம்பாஷித்துக்கொண்டிருந்தபோது நடனமாடியது பற்றிக் கூறினார். இரவு 11-45 மணிக்கு மது அருந்தினேன். மாலினியிடம் ஒரு 'டிறிங்ஸ்' கொண்டுவரும்படி கேட்டபோது அவரின் அறையிலிருந்த போத்திலிலிருந்து சாராயம் கொண்டு வந்து தந்தார். நானும் மாலியும் சந்தோஷமாக இருந்தோம். பின்பு படுத்துவிட்டோம்.

'அன்று காலை கோவிலுக்குப் போனபோது கோயில் பூசகரிடம், கைவிசேசம் பெறுவதற்கு நல்ல நேரம் எது என்று கேட்டோம். அதிகாலை 1-46லிருந்து 2.19 வரை என்று கூறினர். அதனால் கைவிசேஷம் பெற 2 மணிக்கு மணிக்கூட்டில் அலாரம் வைத்துவிட்டுப் படுத்தோம்.

'1981ம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதியும் கைவிசேஷம் மாற்றிக்கொண்டோம். அப்போது மகேந்திரன் ஆனையிறவில் இருந்தார். மாலினி என்னுடன் கொழும்பில் இருந்தார். அன்று மாலினிக்கு கைவிசேஷம் கொடுத்தேன்.

### பிள்ளை நிலத்தில் படுத்திருந்தது

'அறையில் மாலினி கட்டிலில் படுத்திருந்தார். பிள்ளை வழமைபோல் நிலத்தில் படுத்திருந்தது. எனக்குப் பக்கத்தில் நிலத்தில் பிள்ளை படுத்திருந்தது. சாரமொன்றை விரித்திருந்தேன். நான் நித்திரையானபோது மாலினி கையைப் பிடித்து எழுப்பினார். எனது அறைக்குச் சென்று லைட்டைப் போட்டேன். பின் திரும்பி வந்தேன். மாலினி எழுந்து போய்விட்டார். பிள்ளை படுத்திருந்தது. யாரோ கதவைத் தட்டுவதாக மாலினி வந்து கூறினார்.

'வெளியில் சகாயராசா வந்துநின்றார். அவர் கிளிநொச்சியில் 'வீடியோ' படம் காட்டிவிட்டு வந்திருந்தார். வசூல் எப்படி? என்று அவரிடம் கேட்டேன். மட்டுமட்டாக இருப்பதாகக் கூறினார். எவ்வளவு? என்று கேட்டேன். 428 ரூபா என்றார். தங்கள் காருக்குப் பெற்றோல் இல்லையென்றும், பெற்றோல் தரும்படியும் கேட்டார். நான் உள்ளே சென்று தருவதாகச் சொன்னேன்.

### பெற்றோல் கொடுத்தேன்

''காரை இயக்கி ஒரு போத்தல் பெற்றோலை எடுத்துக் கொடுத்தேன். எங்கு போக வேண்டுமென்று கேட்டபோது கிளிநொச்சிக்கு 'வீடியோ' காட்டிய இடத்திற்குப் போக வேண்டும் என்றார். மூன்று நான்கு பேர் வெளியில் நின்றனர். அப்போது 2 மணி இருக்குமென சகாயராசா கூறினார். என்னிடம் பெற்றோல் வாங்குவதற்காக காரைத் தள்ளிக் கொண்டு வந்திருந்தனர்.

### கேற்றை பூட்டினேன்

'கேற்றைப் பூட்டிவிட்டுப் போகும்படி சகாயராசாவிடம் கூறினேன். நான் முன்கதவை பூட்டிவிட்டு உள்ளே சென்றேன். மாலினியின் அறைக்குள் சென்றேன். கைவிசேசத்திற்கு நேரமாகிறது என்றேன். அப்போது அவர் ஒரு ரூபா குற்றியை கைவிசேசமாகத் தந்தார். அப்போது 2-10 நேரம் காட்டியது. என் சட்டப்பைக்குள் காசு வைத்திருந்தேன். அதனை எடுக்க எனது அறைக்குச் சென்றேன். மாலினிக்கு 10 ரூபா கைவிசேசம் கொடுத்தேன்.

''இன்றுவரைக்கும் நாங்கள் பிடிபடாமல் தப்பிவிட்டோம். போனவர்கள் திரும்பி வரக்கூடும், ஆகவே நாங்கள் தனியத் தனியே போய்படுப்போம் என்று மாலினிடம் கூறினேன்.

''அப்போது மாலினி ''அதைப்பற்றி பரவாயில்லை ஒன்றும் நடக்காது' என்றார். அந்தநேரத்தில் எனது கையில் பெற்றோல் மணம் வீசியபடியால், பைப்பில் கையைக் கழுவினேன். பின் குளிர்

(5ம் பக்கம் பார்க்க)

## "சிவகுமார் கோப்பிபருக்க மாலினி குடிக்கவில்லை"

### சிற்றூழியர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''மாலினி நிலத்தில் படுத்திருந்தார். சிவகுமாருக்குக் கோப்பி கொடுத்தேன். அவர் மாலினிக்குப் பருக்கினார். மாலினி குடிக்கவில்லை. 'குடி குடி' என்று சொல்லிக் கொடுத்தார். மாலினியின் கண்கள் திறந்தநிலையில் இருந்தன.''

ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனச் சிற்றூழியர் டொன் வின்சன்ட் போல் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

அவர் மேலும் கூறியதாவது: ''15ந் திகதி அதிகாலை 4-30மணிக்கு சிவகுமார் வந்து என்னை அழைத்தார். கணக்காளரின் மனைவிக்குச் சுகமில்லையென்றும், கோப்பி கொண்டுவரும்படியும் சொன்னார். கோப்பி கொண்டுவந்தேன். சிவகுமார் கோப்பி பருக்கினார். மாலினி குடிக்கவில்லை.

'சுகமில்லை கொஞ்சம் பிடியும்; காருக்குக் கொண்டு போவோம்'' என்று சிவகுமார் சொன்னார். காருக்குக் கொண்டுசென்றோம். ராஜூவும், ஜோசப்பும் வந்தனர். 4 பேர் காரில் சென்றோம்.

14ந் திகதி இரவு 8-45 மணிக்கு கணக்காளர் கொழும்பு சென்றார். அவர் கூறியபடி 2 சாப்பாடு வாங்கிச் சென்றேன் இறைச்சிக்கறி முடியவில்லை. மரக்கறி எடுத்துச்சென்றேன். அன்று சுற்றுலா விடுதியில் ஒரு விருந்து வைபவம் நடந்தது. அதன்பின் 10-30 மணிக்கு இறைச்சிக்கறி கொண்டு சென்றேன். சிவகுமார் இறைச்சியை வாங்கிவைத்தார். மாலினியும் அப்போது நின்றார்.

''எனக்குத் தெரிந்தவரை கணக்காளரும், மனைவியும் சந்தோஷமாகவே வாழ்ந்து வந்தார்கள்.''

## "சிவகுமாருடன் எனது மனைவி தனியாக கொழும்பு சென்றதில்லை"

### கணக்காளர் மகேந்திரன் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''எனது மனைவி எந்தக் காரணம் கொண்டும் சிவகுமாருடன் தனியாகக் கொழும்பு சென்றதில்லை. நான் புதுவருட விடுமுறையில் ஆனையிறவில் நின்றுவிட்டு கொழும்பு திரும்பும் வரை எனது மனைவி சந்தோசமாகவும் கலகலப்பாகவும் இருந்தார்.''

மாலினி மரணவிசாரணையில் சாட்சியமளித்த மாலினியின் கணவரான கணக்காளர் கே. மகேந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் மரண விசாரணை நடைபெற்றது.

கணக்காளர் கே. மகேந்திரன் மேலும் கூறியதாவது: ''ரயில் நிலையத்தில் எனது மனைவி சிரித்து வழியனுப்பி வைத்தார். எங்களுக்கிடையே எவ்வித மனக் கசப்பும்இருந்ததில்லை.

### சந்தேகம் ஏற்பட்டது

''இறுதிக் கிரிகைக்கு தாலிக்கொடி வேண்டும் என்பதால், ஆனையிறவு விடுதிக்கு சிவகுமாருடன் சென்றேன். சிவகுமார் எனது அறைக்குள் இருந்த போத்தலை எடுத்துத் தனது பெனியனால் துடைத்தார். அவர் அதிலிருந்த தனது கைவிரல் அடையாளத்தை அழிக்கிறார் என்று நான் சந்தேகித்தேன். சிவகுமார் எனது படுக்கை அறைக்குள் இருந்த தனது ஷேர்ட் ஒன்றையும் எடுத்துச் சென்றார். நான் அவரிடம் விபரங்களைக்கேட்டேன். அப்போது என்னைச் சந்தேகிக்கிறீரா? என்று சிவகுமார் கேட்டார். நான் கொழும்பிற்குச் சென்ற பின் மனைவி 'டமரோன்' குடித்ததாக அவர் சொன்னார். சிவகுமார் சாராயப் போத்தலைஎடுத்து துடைத்ததும், அவர் நடந்துகொண்டவிதமும் அவரில் எனக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

''சிவகுமார் எனது நண்பர். அவர் எம்முடன் எமது விடுதியில் தங்குவார். இறந்தவர் என் மனைவி. ஐந்து வருடத்திற்கு முன் திருமணம் நடந்தது. எமக்குப் பத்து மாதக் குழந்தை ஒன்றுண்டு நானும் மனைவியும் பிள்ளையும் யாழ்ப்பாணத்தில் தங்கிவிட்டு 12ம் திகதி மீண்டும் சிவகுமாரின் காரில் ஆனையிறவு விடுதிக்குச் சென்றோம். பளையில் காரை நிறுத்திவிட்டு, சிவகுமார் சாப்பாடு எடுத்துவருவதாகச் சொன்னார். அவர் திரும்பி வந்தபோது கையில் சாப்பாட்டுப் பார்சல் இல்லை. ஆனால் அவரிடம் மதுவாடை வீசியது. மது அருந்தினீரா? என்று கேட்டேன். அங்கு சாராயம் விற்பதில்லை என்று கூறினார். எங்கள் இருவருக்குமிடையில் அப்போது வாக்குவாதம் ஏற்பட்டது. எம்மைக் காரிலிருந்து இறக்கிவிடுமாறு சொன்னேன்.

''நாம் மரியாதை உள்ளவர்கள் எங்களை இறக்கி விடும்'' என்று மாலினியும் சொன்னார். ஆனால் சிவகுமார் காரை நிறுத்தாது ஓட்டிச்சென்றார். மனைவி காரிலிருந்து குதிக்கப் போவதாகச் சொன்னார். நானும் காரை நிறுத்தமுயற்சித்தேன். அப்போது காரைச் சிவகுமார் வேகமாக ஓட்டினார். பின்னர் ஆனையிறவு தடுப்பு முகாமில் கார் நின்றது. அங்கு நானும், மனைவியும்: பிள்ளையும், சூட்கேசுடன் காரைவிட்டு இறங்கினோம். அப்போது இரவு 11-30 மணியிருக்கும். அப்போது 3பேர் வந்து பயமுறுத்தினார்கள். சிவகுமார் மீண்டும் காரில் வந்தார். நாங்கள் காரில் ஏறினோம். முன்னர் நடந்த சம்பவங்களை மறந்து அவருடன் காரில் விடுதிக்குச் சென்றோம். வீட்டில் இரவு சமைத்துச் சாப்பிட்டோம்.

''13ம் திகதி சிவகுமாரின் காரில் கிளிநொச்சி கந்தசாமி கோவிலுக்குச் சென்றோம். அதன்பின் வீடு வந்து நான் கொழும்பு போக ஆயத்தமானேன். பின் எல்லோரும் வந்து என்னைக் கொழும்பிற்கு வழியனுப்பினார்கள். மனைவி கையசைத்து விடைகொடுத்தார்.

''15ம் திகதி காலை நான் கொழும்பில் அலுவலகத்தில் இருந்தபோது, சிவகுமாரின் தந்தை என் மனைவிக்குச் சுகமில்லை என்று தொலைபேசியில் கூறினார். தொலைபேசி திடீரெனத் துண்டிப்படைந்தது. அதன் பின் யாழ்ப்பாணம் வந்தபோது முதலில் சிவகுமாரைக் கண்டு கேட்டபோது அவர் எதுவித பதிலும் கூறவில்லை. மனைவி இறந்ததைப் பின்னர் அறிந்தேன்.'' (க)


மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து
அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF
குமுலுஸ் எஸ்




நீரில் கரையக் கூடிய
80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைக்ளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது


இது ஒரு ''மேற்கு ஜெர்மனி 'BASF'' தயாரிப்பாகும்.

குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 12/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

மக்வுட்ஸ் ஸ்தாபனம்
297, யூனியன் பிளேஸ், கொழும்பு 2
தொலைபேசி: 32911-5

## பங்கு வழங்குதல் இப்பொழுது நடைபெறுகிறது




Phoenix

முன் எப்பொழுதும் இல்லாதவாறு இன்று கட்டிடங்கள் பெருமளவில் நிர்மாணிக்கப்படுகின்றன. அவை உயர்ந்து செல்வது மட்டுமல்ல விரைவாகவும் நிர்மாணிக்கப் படுகின்றன. இதனுல் சீமெந்தின் தேவையும் பலமடங்கு கூடியிருக்கிறது.

உள்ளூர் உற்பத்தியில் முழுப்பங்கினைக் கொண்டுள்ள இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம் தனது உற்பத்தித் திறனைப் பெருக்கி, அதிகரித்துவரும் சீமெந்து தேவையினை எதிர்நோக்கும் எண்ணத்துடன் லங்கா சீமெந்து லிமிட்டெட்டை ஆரம்பித்துள்ளது.

காங்கேசன்துறையில் 100.5 கோடி ரூபா பெறுமதியான தன்னியக்கமுறையில் அமைந்த தொழிற்சாலை, துறைமுகப்பாலம் மற்றும் துணைச்சேவைகளைக் கொண்ட தொகுதி ஒன்று வெகுவிரைவில் பூர்த்தியாகவிருக்கிறது. இந்த ஆண்டு முடிவடையவிருக்கும் திட்டத்தின் 1 வது கட்டத்தின் கீழ் 500,000 தொன் உற்பத்திசெய்யப்படும். 1983, ஜூன் மாதத்தில் 2 வது கட்டம் முடிவடைந்ததும் உற்பத்தி 10 லட்சம் தொன்னுக அதிகரிக்கும்.

இலாபம் தரும் இந்த முயற்சியில் நீங்களும் சேருங்கள் ஒவ்வொன்றும் 10 ரூபா பெறுமதியான 1.2 கோடி பங்குகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன. பங்கு வழங்குகையின் மொத்த பெறுமதி 30 கோடி ரூபா முதல் ஆண்டிலேயே பங்கிலாபம் பெறும் வாய்ப்புண்டு

### முதலீட்டு நிவாரணமும் வரிச் சலுகைகளும்

- வரிமதிப்பிடற்குரிய வருமானத்தின் 1/3 பகுதிவ்ரை முதலீட்டு நிவாரணம்
- கம்பெனியின் இலாபங்களின் மீது ஐந்து வருட வரி விடுமுறை
- ஐந்து வருடங்களுக்கு பங்கிலாபங்களுக்கு வரி விலக்கு
- வரி விடுமுறைக்குப் பின்னர் குறைந்த வீத வரி மதிப்பு
- வரி விடுமுறைக்குப் பின்னர் பங்கிலாபங்களின் மீதான வரி நிறுத்தி வைக்கப்படமாட்டாது
- வதிவு கம்பெனிகள் பெறும் பங்கிலாபங்களுக்கு வரி இல்லை
- மூலதன இலாபங்களுக்கு வரி இல்லை

பங்கு வழங்குதல் மார்ச் 3 முதல் 1982 ஏப்ரல் 30 வரை

முதலீடு செய்வது பற்றிய விபரங்களைத் தரும் முற்பகர்வின் இலவச பிரதிக்கு இங்கு தரப்பட்டுள்ள கூப்பனை அனுப்பி வையுங்கள்.

நிர்வாக ஆலோசனைப் பிரிவு,
இலங்கை வங்கி, 411, காலி வீதி, கொழும்பு - 3

லங்கா சீமெந்து லிமிட்டெட் பங்கு வழங்குகை மீதான முற்பகர்வின் பிரதியொன்றையும் பங்குகளுக்கான ..........விண்ணப்பப் படிலங்களையும் தயவு செய்து அனுப்பி வையுங்கள்.

பெயர் : ....................................

முகவரி: ....................................

லங்கா சீமெந்து லிமிட்டெட்டுடன் சேர்ந்து உறுதியான எதிர்காலத்தை கட்டியெழுப்புங்கள்

**லங்கா சீமெந்து லிமிட்டெட்**

அல்மனுர் கட்டிடம், 302, காலி வீதி,
கொழும்பு - 4 தொலைபேசி: 589126

# டாக்டரிடம் நடந்ததைக் கூற...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சாதனப்பெட்டியிலிருந்து தண்ணீர் எடுத்துக் குடித்துவிட்டு என் அறைக்குச் சென்றேன்.

நீதவான்: வெளியில் போத்தலில் தண்ணீர் இருக்கவில்லையா?— நாங்கள் சாப்பிட்டபோது தண்ணீர் போத்தல் வெளியில் இருந்தது. அந்தப் போத்தல் தண்ணீரை குடித்தேன். குளிர்சாதனப் பெட்டியிலிருந்து குடித்தேஞ? என்று ஞாபகமில்லை.

''பின்னர் திரும்பிவந்தபோது மாலினி கையில் கிளாஸ் ஒன்று இருந்தது. தான் மது அருந்தப்போவதாக கூறினர். தானுகவே கிளாஸில் சாராயம் ஊற்றிக் குடித்தார். அத்துடன் நானும் குடித்தேன். மாலினி சாராயத்தில் ஒன்றும் கலக்காமல் குடித்தார். நானும் அப்படியே குடித்தேன். பின் எனது அறைக்குள் சென்றுவிட்டேன்.

நீதவான்: உமது கட்டில் விரிப்பு எங்கே இருந்தது?— நான் வழக்கமாக தங்கும் அறையில் விரிப்பு இருந்தது. அன்று நான் மாலினியின் அறையில் படுத்தபடியால் விரிப்பை மாலினி அறைக்கு எடுத்துச்சென்றேன்.

நீதி: அந்த விரிப்பை பாவித்தீரா?— ஆம்:

நீதி: அந்த விரிப்புக்கு என்ன நடந்தது?— திருப்பிக் கொண்டுவந்தது ஞாபகமில்லை.

நீதி: எதனை விரித்துப் படுத்தீர்?— சாரத்தை.

நீதி: நீர் கொண்டுபோன விரிப்புக்கு என்ன நடந்தது?— கட்டிலில் வைத்தேன்.

நீதி: அதனை என்ன செய்தீர்?— கட்டிலில் வைத்தேன்.

நீதி: விரிப்பை மாலினி அறைக்கு ஏன் கொண்டு போனீர்?— பாவிப்பதற்கு.

நீதி: பாவித்திரா? கட்டிலில் வைத்தேன்.

நீதி: படுப்பதற்கு உமது விருப்பப்படி சாரத்தை எடுத்தீர்?— ஆம்.

நீதி: மாலினியின் அறையை பூட்டினீரா?— இல்லை. வழக்கமாக திறந்திருக்கும்.

நீதி: சாரத்தை எங்கே கண்டீர்?— தொட்டிலில்.

நீதி: அந்த அறைக்குள் ஒரு மேசை உண்டு?— ஆம்.

நீதி: முன்னர் சாரம் மேசையில் கிடந்ததாகக் கூறினீர்?— மேசைக்கு கிட்ட.

நீதி: சாரத்தை கண்டதும் பாவிக்க பார்த்திருப்பீர், எங்கே சாரத்தைக் கண்டீர்?— ஞாபகமில்லை.

நீதி: விரிப்புக்கு என்ன நடந்தது?— கட்டிலில் கிடந்தது 15ம் திகதி மகேந்திரனுடன் ஆனையிறவு வீட்டிற்குச் சென்றேன். அப்போது அவர் அங்குள்ள பொருட்களை எடுத்தார்.

நீதி: விரிப்பை அவர் எடுத்ததைக் கண்டீரா?— இல்லை.

நீதி: விரிப்பை எடுத்ததாக அவர் சொன்னரா?— இல்லை.

## கைவிசேடம் பரிமாறினேம்

கைவிசேடம் பறிரிமாறியபின்னர் நான் மாலினி குடித்த கிளாஸில் குடித்தேன். அதன் பின்னர் எனது அறைக்குச் சென்றுபடுத்தேன். அப்போது மாலினி எனது அறைக்கு வந்தார். என்னைத் தனது அறைக்குவரும்படி அழைத்தார். நான் அவரை திரும்பிப் போகும்படி கூறினேன். பிள்ளையிருக்கிறபடியால் அங்கு போய் படுக்கும்படி சொன்னேன். ''வாறீரா? இல்லையா?'' என்று மாலினி வற்புறுத்திஞர்.

## மாலினி அறைக்கு சென்றேன்

''நான் மீண்டும் மாலினி அறைக்குச் சென்றபோது மருந்து வாடை வீசியது. நான் அறைக்குச் சென்றபோது அதிகாலை 3-45 மணியிருக்கும். எதுவும் குடித்தீரா என்றேன். இல்லை என்ருர். உண்மையைச் சொல்லும் என்றேன். தேங்காய்ப்பால் கொண்டுவரும்படி சொன்னர். நான் தேங்காய் துருவி பால் பிழிந்து கொடுத்தேன். அவர் குடித்தார். கொஞ்சம் வெளியிலும் வந்தது.

## தேங்காய்ப்பால் கொடுத்தேன்

''பின்பாத்றூமிற்கு செல்ல வேண்டுமென்ருர். நான் அணைத்தபடி கூட்டிச்சென்றேன். அங்கு அவரை விட்டுவிட்டுத்தான் எனது அறைக்கு வந்து காற்சட்டை மாற்றினேன். பின்அவரை வெளியில் கூட்டிவந்தேன். மாலினியை அவரது அறைக்கு கூட்டிச் சென்று படுக்கையில் கிடத்தினேன், தேங்காய்ப்பால் வேண்டும் என்ருர். மீண்டும் பிழிந்து கொடுத்தேன். பின் சரிந்து படுத்தார். ஏதாவது நடந்தால் சொல்லும் என்றேன். எனக்கு ஒன்றும் நடக்காது என்ருர். ஹோல் யன்னலைப் பார்க்கும்படி கூறினர். நான் போய்ப்பார்த்தேன் அங்கு ஒரு போத்தல் இருந்தது மூடி திறக்கப்பட்டிருந்தது. வெளியில் வந்து உதவிக்குஆட்களைக் கூப்பிட்டடன்.

நீதவான்: மகேந்திரன் தனது சாட்சியத்தில் இந்த கிருமிநாசினி போத்தல் உமது அறையில் இருந்ததாக கூறியிருக்கிருர். இதற்கு என்ன சொல்கிறீர்?— எல்லாப் போத்தல்களும் மண்வெட்டி சாமான்களும் வழக்கமாக என் அறையில்தான் இருக்கும். அத்தனை போத்தலிலும் இதுதான் என்று குறிப்பிட்டு கூறமுடியாது. கிருமிநாசினி போத்தலைகண்டீரா என்று பொலிசில் கேட்டார்கள் கண்டிருக்கக்கூடும். திட்டவட்டமாகக் கூறமுடியாது. என்றேன்.

நீதவான்: மகேந்திரனின் சாட்சியத்தில் சகாயராசா பெட்ரோல் வாங்க வந்தபோது தான் மாலினி நஞ்சருந்தியிருக்க வேண்டுமென தனக்கு கூறியதாக தெரிவித்துள்ளார்?— நான் அப்படி அவருக்குக்கூறவில்லை.

நீத: மகேந்திரன் சாட்சியத்தில் தான் உம்மை ஏன் அன்று 12-30மணிக்கு சாப்பிட்டதெனக் கேட்க, 12 30 மணிக்குத்தான் இறைச்சி வந்ததாக நீர் கூறினராா?— ஆம். வழமையாக நான் தாமதித்துதான் சாப்பிடுவேன் மகேந்திரன் கோட்டபோதுஇறைச்சி தாமதித்து வந்ததாக கூறினேன். நேரத்தை கூறவில்லை.

## கோப்பி கொடுத்தேன்

''நான் கூப்பிட்டதும் போல் வந்தார். மாலினி 'கோப்பி கோப்பி' என்று கேட்டார். போலிடம் கோப்பி கொண்டு வரும்படி சொன்னேன். மாலினி சீனி கேட்டார். அப்போது நான் உம்மால் நடக்க முடியுமானல் குசினிக்கு எழுந்து சென்று சீனி எடுக்கும்படி கூறினேன். அவர் எழுந்தார். நடக்கமுடியவில்லை பின் நான் கூட்டிச்சென்று சீனி எடுத்துக்கொடுத்தேன்.

போல் கோப்பி கொண்டு வரப்போனர், அவரை அடிக்கடி எட்டிப்பார்த்தேன் கோப்பி கொண்டுவந்தார். மாலினி கோப்பிகுடிக்க முடியவில்லை பின்காருக்கு கொண்டு சென்றேம். பின் ராஜாவும், ஜோசப்பும் வந்துஏறினர்கள்.

## யார் நல்ல டாக்டர்

''எந்த டாக்டரிடம் போகலாம் யார் நல்ல டாக்டர் என்று போலிடம் கேட்டேன். பழைய டீ. எம். ஓ, தணிகாசலம் அல்லது ரஞ்சனிடம் போகலாம் என்ருர். யார் கிட்டடியில் இருக்கிருர்கள் என்றேன். இரண்டு பேரும் ஒரு இடத்தில் இருப்பதாகவும் டாக்டர் தணிகாசலம் முதல் இருப்பதாகவும் போல் கூறினர். நான் இதற்கு முன்னர் மகேந்திரனுடன் மாலினியை டாக்டர் தனிகாசலத்திடம் கூட்டிச்சென்றிருக்கிறேன்.

''டாக்டரிடம் கொண்டு சென்றேம். டாக்டர் வந்ததும் என்ன நடந்தது என்று டாக்டரிடம் சொல்லும்படி மாலினியிடம் கூறினேன். ஆனல் மாலினியால் கதைக்க முடியவில்லை உடனடியாக ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரும்படி டாக்டர் கூறினர். அங்கு கொண்டுபோனேம்.

நீதவான்: மாலினியை கொண்டுவருமுன் அவர் நஞ்சு குடித்திருந்தது உமக்குத் தெரியும்?— ஆம்.

நீத: டாக்டர் தணிகாசலம் சாட்சியத்தில் நீர் தனக்கு மாலினி நஞ்சு அருந்தி விட்டதாக கூறவில்லை என்று சொல்லியிருக்கிருர்?— நான் அந்த நேரத்தில் பதட்ட நிலையில் இருந்தேன் சொன்னதாக ஞாபகமில்லை.

நீத; மாலினி தடுக்கிருர் வருத்தம் என்று தனக்கு நீர் கூறியதாக டாக்டர் தணிகாசலம் சாட்சியத்தில் கூறியிருக்கிருர்?— என்ன கூறியது என்று ஞாபகமில்லை.

நீதி: மாலினி நஞ்சு அருந்தியதாக உமக்கு தெரியும். அப்படியிருந்தும் டாக்டருக்கு, நஞ்சு அருந்தியிருக்கலாம் என்று ஏன் கூறினீர்?—மாலினி இந்த மருந்தை அருந்தியதென்று கூறியபோதும், நான் அந்த போத்தலை அவருக்குக் காட்டவில்லை.

நீதி: மணந்து பார்த்தீர்?— ஆம், இதைத்தான் குடித்தார் என்று நினைக்கவில்லை.

நீதி: உமது சாட்சியத்தில், மாலினி கதைத்தபோது மருந்து வாடைவீசியதாகக் கூறினீர்?—ஆம்.

நீதி: போத்தலிலும் அதே மணம்தான் வீசியிருக்கும்?— அந்தநேரத்தில் இருமணத்தையும் தொடர்பு படுத்த முடியவில்லை.

நீதி: ஒரு பொருளை மணத்திலிருந்து அறியலாம்?— ஆம்.

நீதி: இந்த விசாரணை சம்பந்தமாக் கூறப்படும் மருந்தில் கடுமையான மணமுண்டு?— பல கிருமி நாசினியுண்டு வித்தியாசம் தெரியாது.

நீதி: மாலினியில் வீசிய வாடையும் போத்தலில்உள்ள மருந்து வாடையும் தெரியவில்லையா?— பல கிருமிநாசினிகள் உண்டு ஒன்றுபடுத்த முடியாது.

நீதி: அன்று வீட்டில் கோப்பி தயாரித்தீரா?—இல்லை

நீதி: இந்த சம்பவத்திற்கு முன்னர் அல்லது பின்னர் ஏதாவது தயாரித்தீரா?— தேங்காய்ப்பால் தயாரித்தேன்.

நீதி: எத்தனை தடவை மது அருந்தினீர்?— 2 தடவை.

நீதி: மகேந்திரன் தமது சாட்சியத்தில், மாலினியை டாக்டரிடம் கூட்டிச் செல்ல ஏன் தாமதித்தீர் என்று உம்மைக் கேட்டதாகக் கூறியிருக்கிருர்?— மாலினி என்ன அருந்திஞர் என்று அறிய தாமதம் எடுத்ததாகவும் வேறு அப்படி ஒரு தாமதமும் இல்லை என்று சொன்னேன். [க]

# அன்னதானம்

(சரவணை)

புங்குடுதீவு ஸ்ரீகண்ணகை அம்பாள் ஆலய உற்சவத்தின் போது பதினைந்து தினங்களும் அடியார்களுக்கு 'அன்னதானம்' கொடுக்கஏற்பாடாகியுள்ளது.

சென்ற ஆண்டு ஆலய பரிபாலனசபை கூட்டத்தில் அங்கீக்ரிக்கப்பட்ட அன்னதான உபசபையினர் இப்பணியை மேற்கொண்டுள்ளனர்.

# தந்தை செல்வா அமரர் கதிர் ஞாபகார்த்தகூட்டம்

(யாழ்ப்பாணம்)

இன்று சனிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மாலை 4 மணியளவில் தந்தை செல்வநாயகம், அமரர் கதிரவேற்பிள்ளை ஆகியோரின் ஞாபகார்த்தக்கூட்டம் டாக்டர் தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும்.

வண. ச. மா. செல்வராசா அடிகள், திருவாளர்கள் ஈழவேந்தன், கோவை மகேசன், செந்தூர்ராசா, பொன் பூலோகசிங்கம், க.தேவதாஸ், இறைகுமாரன், யாழ். வளாக மாணவசங்கத்தலைவர் இராசநாயகம் மற்றும் சமய, சமூக பல்கலைக்கழக பிரதிநிதிகளும் உரையாற்றுவர். (கு)

# ''முன்னேற்றம் இவர்களினுல் தடைப்படுகிறது''

[இமையாணன்]

பொதுத் தொண்டு செய்யும் நன்மை விரும்பிகள் ஏராளமானேர் இருந்தும், ஒருசில தீமை விரும்பிகளினுல் பொது முன்னேறறங்கள் தடைப்படுகின்றன இவர்கள் தாங்கள் தீமைகளைச் செய்வது மாத்திரமன்றி நன்மை செய்பவர்களுக்கும் தடை செய்து இடையூறு விளைவிக்கிருர்கள். தாங்களாகவே மனம் திருந்தி இவர்கள் இடையூறு செய்யாமல் இருந்தால் அதுவே பேருதவியாக இருக்கும். என்று இமையாணன் சிவனடி சங்கத்தின் 55வது ஆண்டுவிழா: மேர்படி சங்க வாசிகசாலைக்கு முன் உள்ள மைதானத்தில் நடைபெற்றபோது தலைமை வகித்துப்பேசிய திரு. சோ; சபானந்தன் கூறினர்.

இவ்விழாவை முன்னிட்டு பல போட்டிகளும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# ஆலய உற்சவம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் ஸ்ரீ மீனுட்சி சுந்தரேஸ்வரர் கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 27-ம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

விழாக்கள் தொடர்ந்து பதினெரு நாட்கள் நடைபெறும் அடுத்தமாதம் 6-ம் திகதி நடைபெறும் இரத உற்சவத்துடனும், அடுத்து நடை பெறும் தீர்த்தஉற்சவத்துடனும் பூர்த்தியாகும்.

Stadium

மோட்டார்சைக்கிள் பாவனையாளர்களுக்கு ஓர் நற்செய்தி

யாழ்நகரில் STADIUM (ஸ்ரேடியம்)

விசேஷ மலிவு விற்பனை வாரம்!

- ஹெல்மெற் (HELMETS)
- வைசர்ஸ் (VISORS)
- விண்ட்ஸ்கிறீன் (WINDSCREEN)
- கொகிள்ஸ் (GOGGLES)
- சைட்மிரர் (SIDE MIRRORS)
- சைட் பாக்ஸ் (SIDE BAGS)
- றைடிங் கிளவ்ஸ் (RIDING GLOVES)
- மோட்டர் கொம் (MOTOR COM)
- ஸ்ரொப் லைற் ஸ்விற்ச் (STOP LIGHT SWITCH)
- ஸ்ரிக்கர்ஸ் (STICKERS)

உங்கள் தேவைகளை நிறைவுசெய்ய ஓர் அரிய சந்தர்ப்பம்

24-4-1982 முதல் 30-4-1982 வரை மட்டுமே இச்சலுகை

கன்ராபியா மோட்டோர்ஸ் - யாழ்ப்பாணம், சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிட் - யாழ்ப்பாணம்

S. சின்னத்துரை அன் கொம்பனி-யாழ்ப்பாணம், மாருதி மோட்டோர்ஸ்-பருத்தித்துறை

ஆகிய விற்பனைச் சாலைகளில் உங்கள் தேவையை நிறைவுசெய்ய விரையுங்கள்

STADIUM தரமான பொருட்களின் நம்பகமான பெயர்

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 2.30,6.15 9.15
கமலஹாசன்
நினைத்தாலே இனிக்கும்

இரண்டாவது வாரம்
ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாசன்
தில்லுமுல்லு

Regal
Daily 10-30, 2-15, 4-30, 7-00 9-30
Kirg Douglas in
THE FURY
விரைவில்!
கயலும் கயரும்
[கலர்]
மலையாளப்படம்

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
TARZAN THE APE MAN
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி — விஜயா
ராமு

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
குழந்தையும் தெய்வமும்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-15, 9-45
ஜெய்சங்கர்...ஜெய்சித்ரா...சுருளி...மனோரமா
உங்கள் விருப்பம் (புதிய பிரதி)
—நகைச்சுவைச் சித்திரம்—

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி - நாகேஷ்
பூ மா லை (புதிய பிரதி)
வெகுவிரையில் அலைகள் ஓய்வதில்லை

ராஜா தினசரி 10.30, 2.30, 6.00 and 9.30
யாழ்ப்பாணம்)
சிவாஜி சிவகுமார்
காவல் தெய்வம் (புதிய பிரதி)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
''காதல் தியாகத்திலேதான் முழு வடிவம்பெறுகிறது!'' பார்ப்பதற்கு மனங்கவரும் வண்ணக் காட்சிகளும், கேட்பதற்கு இனிய பாடல்களும், உணர்வதர்கு கருத்தாழம் நிறைந்த உரையாடல்களும், மொத்தத்தில் அற்புதமான திரைக் காவியந்தான் நட்சத்திரம்!
இப்பொழுது 4வது வாரமாக வெற்றிநடைபோடுகிறது
நட்சத்திரம்
(ஈஸ்ட்மன் கலர்)

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 11ம் திகதி
சனிக்கிழமை
(24—4—82)

மேடம்; குடும்பக் கவலையுடன் குறுக்குவழித் தலையீடு புதிர் போடும். வாழ்க்கையில் சோர்வுக்கு இடமுண்டு. சிறு விடயத்துக்குக்கூட மற்றவர்கள் குறைகூறுவார்கள்.

இடபம்: இனிதானபேச்சின் மூலம் எல்லோரையும் வசிகரிப்பீர்கள். கனிவான நினைவுகள் தலைதூக்கும். கல்வி கற்கும் மாணவர்களுக்கு இன்று முன்னேற்றமான தினம்.

மிதுனம்: மனக்கவலைக்கு இடமுண்டு. சுறுசுறுப்புக் குன்றும். கொள்கையினால் கோணலுடன்கோபமும் உண்டாகும். அமைதி நன்று.

கடகம்: மதிவழி நடப்பின் மற்றவர்கள் பெருமைப்படும் அளவிற்கு முன்னேற்றம் உண்டு. அறிஞர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

சிங்கம்: வசதிகள் பெருகும். வாழக்கையும் வளமும் நிறைந்ததாகக் காணப்படும். தொழில் துறையில் புதிய தொடர்பு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

கன்னி: வருமானத்தில் வீழ்ச்சி தென்படும். எதிர்பாராதவிபத்து ஏற்படும். எதிலும் நிதான புத்தியுடன் நடந்து கொள்ளவும்.

துலாம்: ஒளிக்கதிர்கள் உங்கள் வாழ்க்கையில் பரவும். உல்லாசமாகப் பொழுது போக்க விரும்புவீர்கள். குழந்தைகளினால் மகிழ்ச்சி உண்டு.

விருச்சிகம்: எதிர்பாராத முறையில் இருந்து ஆபத்து உருவாகும். வாழ்க்கை சோதனை நிறைந்ததாக இருக்கும். உணர்ச்சிவசப்படாது இருத்தல் நன்று.


தனு: உள்ளப்படுதாவில் உவகை கூத்தாடும். உறவினர்கள் உதவுவதற்கு முன்வருவார்கள். பத்திரிகைத்தொழிலில் ஈடுபடுபவர் பாராட்டுதல்களைப் பெறுவார்கள்.

மகரம்: தொழில் மாற்றம் அல்லது இடப்பிரிவுக்கு வழிகோலப்படலாம். இதன்மூலம் பதவி உயர்வுக்கு வழிகோலப்படலாம்.

கும்பம்: வாழ்க்கைதரத்தை உயர்த்துவதற்கு பல வழிசளிலும் முயற்சி செய்யப்படுவீர்கள். புதிய தொழில்துறையில் வாய்ப்புக்கிடைக்கும்.

மீனம்: எக்கருமத்தையும் எண்ணித்துணிக. அவசரப் போக்கினால் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும். வணிகர்கள் அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை



கதிரவேல் சாமியார்

கதிரவேல் சாமியாருடன் எனக்கு சிறுபராயம் முதல் நெருங்கிய ஈடுபாடு இருந்து வந்தது. விகடமாகப்பேசி, குட்டிக் கதைகளும் உவமைகளும் கூறி, நற்பழக்கம், நல்லொழுக்கம் போன்ற நற்பண்புகளை சிறுவர்களுக்கு உணர்த்தி வேரூன்ற வைப்பார். இனிய சுபாவமும், மலர்ந்த முகமும், வெண்ணீறணிந்த மேனியும், அன்பான பேச்சும் நிரம்பிய ஒருவராக இவரை நாம் கண்ணுரக்கண்டோம். அவருடைய அன்னை பார்வதி தெய்வ பக்தியும் முருகப்பிரான் வழிபாடும் நிரம்பியவராக கதிர்காமச் கடவுளின் பேறால் பெற்றெடுத்த மகன் கதிரவேலர் ஆசார சீலராகவும், தெய்வபக்தியுடையராவும், யோகர் சுவாமிகளின் விருப்புக்குரிய சிஷ்யராகவும், பண்பாளராகவும், பலராலும் மதிக்கப்பட்டவராகவும் திகழ்ந்தார்.

தமக்கென வாழாது, பிறர்க்குரியர்ளராக வாழ்ந்து இன்று பூவுலகைவிட்டு அவரது ஆத்மா பிரிந்து மூன்று ஆண்டுகளாகியும் அவர் எம்மனக் கண்முன்னே நீங்காத நினைவைப் பெற்று. எம்மை ஆத்மீக வழியில் அடியெடுத்து வைக்க வழிநடத்தியதை மறந்துவிட முடியவில்லை. அவர்களின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றேன்.

சட்டத்தரணி.
சி. நாகராஜா,

# புகழ் கொண்ட பெரியார்

மனித வாழ்க்கையை இலை வாழ்க்கை, கிளை வாழ்க்கை, மரவாழ்க்கை, வேர்வாழ்க்கை என நம் முன்னோர் பிரித்துள்ளனர். இலையாக வாழ்ந்து உதிர்ந்து சருகானோர் பலர். கிளையாக வாழ்ந்து சில இலைகளையாவது உற்பத்தி செய்தோர் சிலர். மரமாகவாழ்ந்து கிளைகளையும் இலைகளையும் உற்பத்தி செய்தோர் சிலரினும் சிலர். ஆனால்வேராக வாழ்ந்து தன் குடும்பத்தினர்க்கும், உறவினர்களுக்கும், நண்பகளுக்கும் அனைத்துமாய் நின்றவரே பெரியார் வீ. கே. முருகேசு.

'முருகேசு' என்றதுமே தூய வெள்ளாடை புனைந்து கதர்ச் சட்டை அணிந்து, காந்திக் குல்லாய் தரித்து, நிமிர்ந்த நேரான பார்வை கொண்ட காட்சிக்கு எளியதொருமாட்சி கொண்ட தோற்றம் தென்படத்தவறுது. அமைதியும், அடக்கமும், உயர்ந்த உள்ளமும், இனிய சுபாவமும், நிறைந்த அனுபனமும், எதையும் தெளிவுற மொழியும் ஆற்றலும் உடைய பெரியாராக அவர் விளங்கினர்.

சமூகத்தொண்டு, சமயத் தொண்டு ஆகியவற்றில், தனக்கு நிகர் தானேயென வாழ்ந்தவர். செய்யுந் தொழிலே தெய்வம் என மதித்து அதில் மனநிறைவு கண் பெரியார் முருகேசு அவர்கள் சிறந்த சிவபக்தனுவார். திருக்கேதீஸ்வரப்புனருத்தாரணவேலைகள் தொடங்கப்பட்ட நாள் முதலாக, அவ்வாலயத் தர்மகாரியங்களில் ஈடுபட்டார். இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயம் நிர்மாணித்தது தொடக்கம் அதன் தர்மதர்த்தா சபை உறுப்பினராகவுமிருந்து சமயப்பணிகள் பலபுரிந்த பெரியார் முருகேசு அவர்களைஇழந்தது நமது துர்ப்பாக்கியமேயாகும்.

பெரியார் முருகேசு இயற்கையடைவதற்குப் பதினைந்து வருடங்களுக்கு முன்னமேயே தமது மரணச்சடங்குகள் எவ்வாறு நடைபெற வேண்டும் எனப் பதிவு நாடாவில் கூறிவைத்திருந்தார். அவருடைய இறுதி யாத்திரையில் கலந்து கொள்ள வந்த பெருந்திரளான மக்களுக்கு இவரது மரணசாசன வார்த்தைகள் பெரும் ஆச்சரியத்தை அளித்தன. தம்மை வண்டிலில் சிசுலைக்கு எடுத்துச்சென்று வேறு எந்தவிதமான மரபுகளோ சம்பிரதாயங்களோ கடைப்பிடிக்காது கற்பூரத்தில் தமது உடலுக்கு தீயிடுமாறு கூறியிருந்தார். சம்பிரதாய செயற்பாடுகளில் தமக்குநம்பிக்கையில்லையென்றும், இதனைமீறி யாராவது வேறுநடவடிக்கைகளில் ஈடுபடுவார்களானல் அதனல் ஏற்படும் விளைவுகளுக்குத் தமது ஆன்மா பொறுப்பாளியல்ல எனத் திட்டவட்டமாக அப்பதிவு நாடாவில் வரைந்திருந்தார்.

பழம்பெரும் சைவக் குடும்பத்தைச் சேர்ந்த பெரியார் முருகேசுவின் மரணசாசன வார்த்தைகள் வீணன செலவுகளுக்கு இறந்தபின்பும் இடமளிக்கக் கூடாதென் பதற்கு முன்னோடியாக இருக்கவே விரும்பினர் என ஊகித்தறியக் கூடியதாகவுள்ளது.

நாட்டின்உயர்மட்டஅதிகாரிகள் தொடக்கம் சாதாரண பாமரமக்கள்வரை சாதி சமய வேறுபாடற்ற நண்பர்கள் நிறைய பெரியாருக்குண்டு. வாழ்க்கையில் எத்தகைய இடுக்கண்கள் நேரினும் எதையும் தாங்கும் இதயம் கொண்டவராய், மனத்தின்கண் மாசிலனாய், கலகலப்பான வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்ந்தவராவார். தென்னகத்திலுள்ள அத்தனை ஆலயங்களையும் வட இந்திய ஆலயங்களையும் தரிசித்து அவ்வாலயங்களில் எழுந்தருளியிருக்கும் தெய்வங்களின் அருட்பார்வை பெற்று, வயது எண்பதைக் கடந்த நிலையில் நீண்ட வாழ்வென்று கூறினும் நிறைவான வாழ்க்கையைப் பெரியார் முருகேசு அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்து காட்டினர்.

—மு. சிவசிதம்பரம், பா.உ.
நல்லூர்.

## தேவி மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நகுலேஸ்வரம்—கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வர ஆலய தேவி மகோற்சவம் இம்மாதம் 26ம் திகதி திங்கள் ஆரம்பமாகிறது. தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் மகோற்சவத்தின் இரத உற்சவம் அடுத்த மாதம் 6ம் திகதி வியாழக்கிழமையும் தீர்த்த உற்சவம் 7ம் திகதி வெள்ளிக்கிழமையும் நடைபெறும்.

## திருவிழா

[சரவணை]

புங்குடுதீவு கண்ணகை அம்மன் என வழங்கும் ராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

''சித்திரத்தேர்த் திருவிழா'' அடுத்த மாதம் 6 ம்திகதியும் தீர்த்தப்பெருவிழா மறுதினம் சித்திரா பூரணைத்தினத்திலும் நடைபெறும்.

## ''இலட்சியவாழ்வு வாழ்ந்தவர்''

இணுவையூர் திரு. தம்பிராசா சண்முகராசாவின் மறைவு சைவத் தமிழ் மக்களுக்கு பேரிழப்பாகும்.


இலங்கை வங்கியில் சிருப்பராகப் பணிபுரிந்த இவர், சமூக, சமயப் பொதுப்பணிகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டு தமது வாழ்வின் பெரும்பகுதியினை இத்தொண்டுகளுக்காக அர்ப்பணித்தார். கொழும்பு, உருத்திரா மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீ சத்ய சாயி சேவா சதுத்தியின் ஒரு அணித் தலைவராக விளங்கிய இவர், யாழ்ப்பாணம் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமித்தியின் 'சேவா தல்' அமைப்பாளராக மூன்றுண்டு காலம்— அமரத்துவம் அடையும் வரை பணிபுரிந்தார். ஸ்ரீ சத்ய சேவா சமித்தியின் அகில உலக மகாநாட்டில் யாழ்ப்பாண சமித்தியின் பிரதிநிதியாக 1980ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கலந்து கொண்டு ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் பிறந்த தின கொண்டாட்டத்திலு பங்குகொண்டார். பகவானின் போதனைகளை சாதனைகளாக ஏற்று ஓர் இலட்சியம் மனிதராக வாழ்ந்து காட்டியவர். சமித்தியின் சமூகத் தொண்டுகளாக வைத்திய முகாம், நாராயண சேவை, மருத்துவ மனைகளில் சிரமதானப்பணி போன்றவற்றில் தீவிரமாகப் பங்கு கொண்டார். மனிதன் ஒருவன் எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பதல்ல, எவ்வாறு வாழ்ந்தான் என்பதையே உலகம் கணிக்கின்றது. அந்த வகையில் அமரர் சண்முகராசா வாழ்வு ஒரு எடுத்துக்காட்டாக அமைகிறது. அன்னார் அமரத்துவம் அடைந்த 31ம் நாளான நேற்று அவர் பணிகளை நினைவு கூர்ந்து அஞ்சலி செய்வோம்.

வைத்திய கலாநிதி
பொன்னுத்துரை

## முருகமூர்த்தி ஆலய உற்சவம்

[பண்டத்தரிப்பு]

பிரசித்திபெற்ற மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவில் வருடாந்த உற்சவம் 26ம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று அடுத்தமாதம் 6ம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.



இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட 'தினகரன்' ஆசிரியர் திரு. ஆர். சிவகுருநாதனைப் பாராட்டு முகமாக யாழ்ப்பாணம் மாநகர மண்டபத்தில் நடத்தப்பட்ட விழாவின் போது யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரும் அரசஅதிபருமான திரு. தேவநேசன் நேசையா திரு. சிவகுருநாதனுக்கு பொன்னுடை போர்த்திக் கௌரவிப்பதையும் இலங்கைப் பத்திரிகை எழுத்தாளர் இயக்கத் தலைவர் திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம் பொதுச் செயலாளர் திரு எஸ். சி. எஸ். சிதம்பரநாதன் ஆகியோர் பாராட்டுப்பத்திரத்தை வழங்குவதையும் யாழ்ப்பாண மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் உரையாற்றிக் கொண்டிருப்பதையும், திருமதி சிவகுருநாதன் திரு சிவகுருநாதன் விழாவுக்குத் தலைமை வகித்த யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் போராசிரியர் எஸ். வித்தியானந்தன் அரச அதிபர் திரு தேவநேசன் நேசையா, நல்லை ஆதீன குரு மகாசந்நிதானம் சோமசுந்தர சுவாமிகள் வண பிதா. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, யாழ்ப்பாண பல்கலைக்கழக பீடாதிபதி பேராசிரியர் க. கைலாசபதி, பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் திரு எஸ். தில்லைநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் உரையாற்றிக் கொண்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புதிதாக கட்டப்பட்ட கோட்டா அரிசி ஆலை விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு விடப்படும் விபரங்கட்கும் சாந்தி மில் வட்டுக்கோட்டை.
2955

றெக்கிளமேசன் கடற்கரை வீதியில் வீடும்காணியும் விற்பனைக்கு உண்டு. கருவாடு தொழிற் புரிவோருக்கும் ஐஸ் தொழிற்சாலை அமைப்பதற்கும் இலாபகரம் ஈட்டித்தரக் கூடிய சகலவசதிகளும் உண்டு. விபரத்திற்கு தொடர்புகொள்ளவும்: சென்ற் அன்ரனீஸ் ஸ்ரோர்ஸ் நாவாந்துறை.
2947

இருபாலை புதுறோட்டில் 10 பரப்பும், அரியாலை கிழக்கில் 47 பரப்பு காணியும் விற்பனைக்கு உள்ளது. 171, குருசோ வீதி, சுண்டிக் ளிக்கு, தொடர்பு கொள்ளவும்.
2958

அரியாலை கிழக்கு நாவலடியில் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ப. திருநீலகண்டன், 76, இலந்தகுளம் றோட், அரியாலை, யாழ்ப்பாணம்.
2942

நீர்வேலி வடக்கில் நிலப் பரப்பு 4½ தோட்டக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: க. சபாரத்தினம், இராசபாதை, நீர்வேலி வடக்கு, நீர்வேலி, 2939

அறுபது 45 கலன் வெற்றும் (Sixty 45gls capacity empty barrels) விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும், சுகந்தன் வியாபார நிலையம், கண்டி வீதி, கைதடி.
2926

A 40 கார் விற்பனைக்கு அல்லது ஜீப்பிற்கு மாற்றுவதற்குண்டு. தினமும் 3 மணிக்குப் பின் மாத்தற பேக்கவுஸ் சுன்னாகத்தில் பார்வையிடலாம்.
2779

புதிய ''வெஸ்பா'' ஸ்கூட்டரும், வோட்பிறிபெக்ற் EL தொடர் இலக்கமுடையகாரும் உடனடியாகவிற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க 870, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2899

## தேவை

பகல் 12-30 முதல் மாலை 6-30 வரை பகுதிநேரக் காசாளராக கடமையாற்ற ஒருவர் வேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் 28-4-82க்கு முன்னர் நற்சான்றிதழ்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும் சன்லைற் றைக்கிளீனேர்ஸ் ராணிதியேட்டர் அருகாமை யாழ்ப்பாணம். 2948

அனுபவமுள்ள உணவு பரிமாறுபவர்களும்; குசினி வேலை செய்யக்கூடியவர்களும் உடன் தேவை. நேரில் வரவும், ரவர் கோப்பி அன் கூல்பார் 324, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 2957

கச்சேரிக் கருகாமையில் கண்டிறேட்டில் வசிக்கும் இரண்டாம் வகுப்பு மாணவனுக்கு பாடங்கள் சொல்லிக் கொடுப்பதற்கு ஓர் ஆசிரியர் தேவை. விளம்பர இல. 2959 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 2959

நெல் குற்றும், மா, மிளகாய் அரைக்கும் கிறைண்டிங் மில்லில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. நேரில் வரவும். சாந்திமில், வட்டுக்கோட்டை.
2954

## வாடகைக்கு

யாழ். மாநகர எல்லைக்குள் அமைதியான சூழலில் அமைந்த வீடு உயர் கல்வி உத்தியோகங்களில் ஈடுபட்டிருக்கும் தனிநபர்களுக்கு ஏற்றது. நீண்டகாலக் குத்தகைக்கும் ஆலோசிக்கலாம் குமாரவயல், அராலி வீதி, யாழ்ப்பாணம்.
2909

## பயிற்சி

றேடியோ — டெலிவிசன். வெல்டிங் மூன்று மாத டிப்ளோமாபயிற்சி வகுட்புக்கள் (சிறந்த செய்முறைப் பயிற்சியுடன்) ஆரம்பம் 26-4-82 இருபாலாரும் சேரலாம் நேரில் வரவும். நாஷனல் அக்கடமி மொம்சாக்கட்டிடம் (விவேகானந்த அச்சகம் முன்பாக) 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2940

## வகுப்பு

3-5-82 டெலிவிஷன் வகுப்புகள் செய்முறைப் பயிற்சியுடன் ஆரம்பமாகவுள்ளன. விபரங்கட்கு: AUTO COOL ENGINEERS, (சாந்தி சினிமா முன்பாக) கந்தப்ப சேகரப் வீதி, யாழ்ப்பாணம். 2943

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## FOR SALE

Toyota Corolla KE 20 8 Sri 2000 series for sale. Immaculate condition 45 m. p. g. Owner Engineer leaving abroad. For first offer above 72,000/- Seen by appointment contact: No. 350, Point Pedro Road, Nallur, Jaffna. 2908

ஊர்காவற்றுறை
ப. நோ. கூ. சங்கம்

## கேள்விப்பத்திரம்

2600 (இரண்டாயிரத்து அறுநூறு) வெற்றுக்சாக்குகளுக்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. ரூ. 2/50 செலுத்தி சங்கத்தில் இருந்து பெறப்பட்ட பத்திரத்தில் பதில் பொது முகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை என்னும் விலாசத்திற்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ கேள்விப்பத்திரங்கள் 27-4-82ந் திகதிக்கு முன் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 27 4-82ம் திகதி பகல் 12-00 மணி வரை விநியோகிக்கப்படும். விண்ணப்பதாரர் ரூபா 750/- வைப்புப்பணம் செலுத்தி இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் சங்கத்தில் சாக்குகளுக்குரிய முழுப்பணத்தையும் செலுத்தி 30-4-82ந் திகதிக்கு முன் சாக்குகளை எடுத்தல் வேண்டும்.

பதில்
பொது முகாமையாளர்

ஊர்காவற்றுறை,
21-4-82. 2950



காலம் சென்ற
**V.K. முருகேசு**
அவர்களின்

மரணச் சடங்குகளில் கலந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றிகள். காலம் சென்றவரின் கடைசி விருப்பத்தின்படி நீங்கள் சகலரும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

இடம்:- ''மாணிக்க வாசா'' இமையாணன் உடுப்பிட்டி.

காலம்:- 25-4-82 ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணி

இங்ஙனம்
ராஜலிங்கம் பானுமதி குடும்பத்தவர்களும்,
V.K. சகோதரர்கள்,
சகோதரிமாரும்.
(2946)

## பிறந்த தின வாழ்த்து

செல்வன் - ஸ்ரீதேவன்
செல்வி - ஸ்ரீதேவி



ஈச்சமோட்டையைச் சேர்ந்த ஸ்ரீஸ்கந்தராசா- இந்திராதேவி தம்பதிகளின் புதல்வர்களின் பிறந்த தினம்: ஸ்ரீ தேவனின் பிறந்த தினம் 24 — 04 — 82, ஸ்ரீ தேவியின் பிறந்த தினம் 08 — 05 — 82. இருவரையும் சீருடனும், சிறப்புடனும் சுகம் பல பெற்று நல்வாழ்வு வாழ வாழ்த்துபவர்கள் அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, சித்தி, சித்தப்பாமார், மாமாமார், அத்தைமார். மச்சான், மச்சாள்மார்.

(2961)

## குறைந்த கட்டண..

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படுகின்றன அதற்குப் பயன்படுத்தப்படும் பூதவுடல்கள் எவ்வாறு போதனைக்காகத் தயார்படுத்தப்படுகின்றன என்டதை விளக்கும் வகையில், இரு வருடங்களுக்கு முன்னர் காலமான 60—70 வயதுகளுக்கிடைப்பட்ட வயோதிபர் ஒருவரின் பூதவுடல் ஒன்று காட்சிக்குவைக்கப்பட்டிருக்கின்றது.

இப்பூதவுடலும் மருத்துவ மாணவர்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் வெட்டப்பட்டு வைக்கப்பட்டிருப்பது போல் மனித உள்ளுறுப்புக்களைப் பற்றி பார்வையாளர்களும் அறியக்கூடியதாக பிரதான உறுப்புக்களைத் தெளிவாகப் பார்க்கும் வகையில் வெட்டப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சி பற்றித் தொகுத்துக் கூறுவதாயின் மூன்று ரூபாய் பிரவேசக் கட்டணத்துடனேயே ஒருவர் தனக்கு வேண்டிய வருத்துவ ஆலோசனைகளையும், மருத்துவக் கல்வியையும், ஒருசில மணித்தியாலங்களில் மருத்துவ நிபுணர்கள் மூலமாகவும், மருத்துவ மாணவர்கள் மூலமாகவும் அறிந்துகொண்டு பயனடைய முடியும் எனலாம்.

## நவசக்தி அருச்சனை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பாணன்குளம் நாச்சி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் திங்கட் கிழமை மாலை நவசக்தி அர்ச்சனை இடம்பெறவிருக்கின்றது.

இதனை முன்னிட்டு அன்றைய தினம் காலை பத்துமணியிலிருந்து மாலை வரை விசேட பூசைகள், அர்ச்சனைகள், அபிஷேகம் ஆகியன நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் இரவு 'சக்தி வழிபாடு' என்ற பொருளில் பேராசிரியர் சா. கைலாசநாதக்குருக்கள் சொற்பொழிவாற்றுவார்.

அம்பாளின் வீதிவலமும் இடம்பெறும் [கி]

## சைவசமய பிரசாரக் கூட்டம்

(சரவணை)

புங்குடுதீவு கண்ணகைபுர சைவ இளைஞர் சங்கம் சைவ சமயப் பிரசாரக்கூட்டம் ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

ஸ்ரீகண்ணகை அம்பாள் ஆலயத்திற்கு அண்மையில் மே 2ந் திகதி மாலை நடைபெறும். இக் கூட்டத்தில் வித்துவான் பொன். கனகசபை, புலவர், ஈழத்து சிவானந்தன், செல்வி மங்கையர்க்கரசி சின்னத்துரை ஆகியோர் கலந்து கொள்வர்.

ஆசிரியமணி திரு. க. நாகலிங்கம் தலைமையில் இக் கூட்டம் நடைபெறவுள்ளது.

(அ)

## போட் ரக்டர் 2000 விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள போட் ரக்ரர் 2000 றெயிலர் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும்:

**நா. சின்னத்தம்பி**
'தவனேசபதி' வறுத்தலைவிளான்,
தெல்லிப்பளை. 2935

## பொலித்தீன் சாக்குகள்

நீடித்த பாவனைக்குகந்த பொலித்தீன் சாக்குகள் விற்பனைக்குண்டு. சணல் சாக்குகளை விட தரத்தில் உயர்ந்தது. சர்வதேச தரத்திற்கு ஒப்பானது. நெல், நவதானியம் போன்றவற்றை நிரப்பி சந்தைப்படுத்துவதற்கும், கோழித்தீன், மீனுணவு, உப்பு போன்ற பொருட்களை நிரப்பி விற்பனை செய்வதற்கும் சிறந்தது. இரு வெவ்வேறு அளவுகளில் உண்டு.

வர்த்தக விசாரணைகள்

**குருடீசல் எஞ்ஜினியேஸ்**
338, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
2936

வடமாகாண தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களினது

## பத்தாவது ஆண்டு நிறைவு விழாவினையொட்டி சமாசம் நடாத்தும் போட்டிகள் பற்றிய விபரங்கள்

கீழ்வரும் போட்டிகள் மேற்படி சமாசத்தினுல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன

| | |
|---|---|
| 1. சிறுகதைப் போட்டி<br>2. கவிதைப் போட்டி<br>3. கட்டுரைப் போட்டி<br>4. பேச்சுப் போட்டி<br>5. நீண்டதூர துவிச்சக்கர வண்டி ஓட்டப்போட்டி | வடமாகாண ரீதியில் |
| 6. 10 கி. மீ மரதன் ஓட்டப் போட்டி.<br>7. நாடகப் போட்டி | தெ. ப. பொ. உ. வி. கூ. சங்க உறுப்பினர், பணியாளர்க்கு மட்டும் |

சிறுகதை, கவிதை, கட்டுரை ஆகியவை சமாச அலுவலகத்திற் கிடைக்கவேண்டிய இறுதித் திகதி 1982—05—15 ஆகும்.

நீண்டதூர துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி, மரதன் ஓட்டப்போட்டிக்குமான விண்ணப்ப முடிவு திகதி 1982—05—19 ஆகும்.

மேலதிக விபரங்களுக்கு அருகாமையில் உள்ள தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கத்துடன் அல்லது யாழ்ப்பாணம் இல. 330. கே. கே. எஸ். வீதியிலுள்ள தெ. ப. பொ. கூ. ச. சமாச அலுவலகத்துடன் தொடர்பு கொள்க.

வடமா. தெ. ப. பொ. கூ. ச. சமாசம்,
330. கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 2951

# "மாலினி இறந்துவிட்டாரா? என்று டாக்டரிடம் கேட்டேன்"

## மூன்றும் நாளாக சிவகுமார் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் மாலினியை ஒரு பெண் டாக்டருக்கு காட்டி 'இறந்துவிட்டாரா?' என்று கேட்டேன். மாலினியை பார்த்த பின்னர் டாக்டர், அவர் இறந்துவிட்டார் என்று கூறினுர். அதன்பின்தான் தாயாருக்கு அறிவிக்கச்சென்றேன்.''

மாலினி மரணவிசாரணையில் மூன்ருவது நாளாக ஆங்கிலத்தில் சாட்சியமளித்தபிராந்திய முகாமையாளர் செல்லத்துரை சிவகுமார் (31 வயது) மேற்கண்டவாறு கூறினுர்.

சிவகுமார் சாட்கியமளிக்கையில் மேலும் கூறியதாவது: ''ஆஸ்பத்திரியில் ஒருபொலிஸ் கான்ஸ்டபிள் நின்ருர். அவரிடம் சென்று நான்தான் மாலினியை கொண்டுவந்ததாக கூறினேன். பின்னர் தாயாருக்கு அறிவித்தேன். பின் மாமனுருடன் ஆஸ்பத்திரிக்குவந்தேன். அப்போது விசாரித்துக் கொண்டிருந்தார்கள். நான் தாயார் வீட்டிற்குச் சென்று திரும்பும்வரை அந்தச் சடலத்தைக் கொண்டுவந்தது யார் என்று ஒருத்தரும் கேட்கவில்லை.

''மாலினியை பார்த்த டாக்டர், இறந்துவிட்டார். என்று கூறியதும், ஒன்றும் செய்யஏலாதா? என்று கேட்டேன். அப்போதுள்ள பதட்ட நிலையில் அப்படிக்கேட்டேன். பின் தள்ளுவண்டியில்வைத்து மேல் மாடிப்படிக்கு கீழ் தள்ளிவிட்டார்கள்.''

## இன்று

[யாழ்ப்பாணம்]

அனலை வடலூர் சனசமூக நிலையத்தினரின ஆதரவில் பாரதி நூற்ருண்டு விழா இன்று மாலை அனலைதீவு ஐயனுர் கோவிலடி முன்றலில் நடைபெறவுள்ளது. விழாவில் யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வர்.

கவியரங்கு, கருத்தரங்கு கலை நிகழ்ச்சியுடன் சிறப்பு நிகழ்ச்சியாக நீராவியடி கிருஷ்ணன் கலைமன்றத்தின் ''இலங்கை வேந்தன்'' இசை, நடன, நாடகமும் இடம்பெறுகிறது.

● ● ●

(திருநெல்வேலி)

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கமண்டபத்தில் பாரதி நூற்ருண்டு விழாவை இன்று மாலை டாக்டர் எஸ். நடராசா ஆரம்பித்து வைப்பார். சிறப்பு நிகழ்ச்சியாக திரு. பாலசுந்தரம் தேவகுமார் அன்பளிப்பு செய்த தொலைக்காட்சியை நல்லூர் உதவி அரசாங்க அதிபர் செ. சபாதிட்பிள்ளை ஆரம்பித்துவைப்பார். பல நிகழ்ச்சிகள் நடைபெறும்.

## சிவகுமாரின் கால்சட்டையையும் ரீ சேட்டையும் பொறுப்பேற்கவும் பொலிசாருக்கு நீதவான் உத்தரவு

[யாழ்ப்பாணம்]

சிவகுமார் அணிந்திருந்த ரீ சேட்டையும் நீள காற்சட்டையையும் மாலினியின் தாயார் வீட்டிலிருந்து பொறுட்பேற்குமாறு யாழ். நீதவான் ரி. ஜோகநாதன் நேற்று பொலிசாருச்கு உத்தரவிட்டார்.

சிவகுமார் நேற்றும் ஆங்கிலத்தில் சுமார் 5 மணி நேரம் ாட்சியமளித்தார்.

ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபன விடுதியில் கடந்த 15ம் திகதி கூட்டுத்தாபன கணக்காளர் கே. மகேந்திரன் மனைவி மாலினி [22வயது] மர்மமான முறையில் மரணமானது தொடர்பான மரண விசாரணை யாழ் நீதிமன்றத்தில் நடைபெற்றுவருகிறது.

மாலினியின் சடலத்திலிருந்து பிரேத பரிசோதனையின் போது எடுக்கப்பட்ட 'நைற்றியை' யும், தேடி எடுத்து அவற்றை பொறுப்பேற்குமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார்.

## கடற்படை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும்யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா கடற் படைத்தளபதியையும் இராணுவத் தளபதியையும் கோரியுள்ளார்.

கடற்படைத் தளபதிக்கும், இராணுவ தளபதிக்கும் காரை நகரிலுள்ள கடற்படை முகாமுக்குப் பொறுப்பாகவுள்ள கமாண்டருக்கும் யாழ். அரசாங்க அதிபர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் ''பொது மக்களும் இளைஞர்களும் கடற்படையினரால்தாக்கப்படுவதாகப்புகார் செய்யப்பட்டுள்ளது, இதுசம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு நல்லுறவு தொடர்ந்து நிலவ வழிசெய்யுங்கள்'' என்று கேட்டுள்ளார்.

## பல விடயங்கள்..-

1ம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்களில் பொய் சொல்லுகிருர் என்று மன்றுக்குத் தோன்றுகிறது. ஆகவே இந்த வழக்கில் சிவகுமார் என்பவர் ஒரு சந்தேக நபராக இருப்பாரென்றும் மன்றுக்குத்தோன்றுகிறது. கிளிநொச்சிப்பொலிசாரை இவருக்கு எதிராக விசாரணை செய்யுமாறு உத்தரவிடுகிறேன்.

அரசாங்க இரசாயனபரிசோதகர், கைவிரல் அடையாள நிபுணர்களுக்கு உடனே அறிவித்து அவர்களை வரவழைத்து இடத்தைப் பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். சிவகுமார் சந்தேக நபராக வைக்கப்பட்டுள்ளார்என்பதை அவருக்கு கூறி அவரை விளக்க மறியலில் வைக்கிறேன்'' என்றும் நீதிபதி கட்டளையிட்டு விசாரணையை அடுத்தமாதம் 4ம் தேதிவரை ஒத்திவைத்தார். (க)

## பொதுமக்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த மூன்று மாணவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்'' என்று திரு. அமிர்தலிங்கம் அத்தந்தியில் குறிப்பிட்டார்.

## சிவகுமார்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளார். அவரை சந்தேக நபராக கண்டிருக்கவில்லை. எனவே இந்த சாட்சி சிவகுமாரை பிணையில் விடுமாறு கோருகிறேன்.''

சிவகுமார் சந்தேக நபராக கருதப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படுவதாகவும் அவர் சார்பில் கோரப்பட்ட பிணை மறுக்கப்படுவதாகவும் நீதவான் தெரிவித்தார். க)

## ந ற் செ ய் தி

DERCO LABORATORIES LIMITED ஸ்தாபனத்தின் வடபிரதேச விற்பனையாளராக நாம் நியமிக்கப்பட்டுள்ளோம்.

**பைன்டர் கம் BYNDER GUM,**
பூவேலை, ஜோடனை வேலை முதலியவற்றுக்கு உபயோகிக்கப்படும் பிசின்.

**கெமி (F) பிக்ஸ் CHEMIFIX**
போமிக்கா, மற்றும் மரஒட்டு வேலைகளுக்கு உபயோகிக்கும் பிசின்.

வியாபாரிகளுக்கு கவர்ச்சியான விசேட கழிவு.

**அம்பலவாணர் அன்சன்ஸ்,**
196, கே.கே.எஸ். வீதி, (கடைத்தெரு பிள்ளையார் கோவில் முன்பாக)
யாழ்ப்பாணம்.
போன்: 8291

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம், மகாத்மா காந்திவீதி 37-ம் இலக்கத்தில் உள்ள கால்வாய்க்கு குறுக்காக இரண்டு மதகுகள் நிர்மாணிப்பதற்கான கேள்விகள் - யாழ்ப்பாணம் 11/8, ஸ்ரான்லி வீதியிலுள்ள மெர்க்கன்டைல் கிறெடிற் லிமிட் முகாமையாளரினுல் ''சிவில் பொறியியல்'' ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள், வரைபடங்கள் மற்றும் விபரங்கள் முகாமையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம். கேள்விகள் 11-5-82 அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அன்றி நேரிலோ கீழ்க்காண் விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

முகாமையாளர்

**மெர்க்கன்டைல் கிறெடிற் லிமிட்,**
11|8, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
2952

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 608ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஏப்பிரல் மீ 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper, in the General P.O. Sri Lanka. Regd. Q. B. 10/236/81. P.O. Box 49, Jaffna தொலைபேசி: 77 07, 889, 8186.